## விளாத்திகுளம் மக்களின் குரல்வளை நெரிக்கப்பட்டு விடக்கூடாது!

# தி.மு.க. ஆட்சியால்தான் இந்தியாவிலேயே தமிழ்நாடு TOP 1-இல் இன்றைக்கு இருக்கிறது!

## சட்டப்பேரவையில் விளாத்திகுளம் ஜி.வி.மார்க்கண்டேயன் பேச்சு!

சென்னை, செப்.6-

**சட்டப்பேரவையில் மானியக் கோரிக்கை விவாதத்தில் விளாத்திகுளம் தொகுதி கழக உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன் பேசுகையில் தி.மு.க. ஆட்சியில் தான் இந்தியாவிலேயே தமிழ்நாடு TOP 1-இல் இன்றைக்கு இருக்கிறது என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.**

சட்டப்பேரவையில் விளாத்திகுளம் தொகுதி கழக உறுப்பினர் ஜி.வி. மார்க்கண்டேயன் பேசியதாவது :-

பேரவைத் தலைவர் அவர்களே, 'All roads lead to Rome' என்று சொல்வார்கள்; அனைத்துச் சாலைகளுமே ரோமாபுரியை நோக்கிச் செல்கின்றன என்பது ஒரு முதுமையான பழமொழி. அதைப்போன்று தான், தமிழ்நாடு அரசியலில் கடந்த 75 ஆண்டுக்கால வரலாற்றைப் பார்த்தால், அரசு கொடுத்திருக்கிற எந்தத் திட்டமாக இருந்தாலும், மிகச் சிறந்த தலைச்சிறந்த ஒரு தலைவன் இந்த நாட்டு மக்களுக்காக, மாற்றுத் திறனாளிகளுக்காக, மனவளர்ச்சி குன்றியவர்களுக்காக, "கீர்த்திகொள் போகப் பொருட்புவியே! உன்றன் கீழிருக்கும் கடைக்கால் எங்கள் சீர்த்தொழிலாளர் உழைத்த உடம்பில் சிதைந்த நரம்புகள் தோல்!" என்று பாவேந்தன் பாரதிதாசனின் வரிகளுக்கிணங்க, தொழிலாளர்கள், கஷ்ட நிலையில் உள்ளவர்கள், விளிம்பு நிலையில் உள்ளவர்கள், கடைநிலையில் உள்ளவர்கள் உள்ளிட்ட அனைவருக்காகவும், காடு களைந்து, கழனி விரித்து, மேடு பள்ளங்களைச் சமன்செய்து, நெற்றி வியர்வை எங்கள் நிலங்களில் சிந்துகின்ற அந்த விவசாயிகளுக்காகவும், பள்ளிகளிலே மற்றும் கல்லூரிகளிலே படிக்கின்ற மாணவர்களுக்காகவும்,

கடந்த 5 ஆண்டுக்காலம் மட்டுமல்ல இன்றுவரை ஏக்கம் இல்லாதவர்களின் ஏக்கமாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சக்திவாய்ந்த தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இன்று கழகத் தலைவராகப் பதவியேற்ற நாள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் அவரை வணங்குகிறேன். எந்தத் திட்டமாக இருந்தாலும் சரி--இன்று வீட்டு வசதித் துறையில் ஒரு introduction-க்குப் பிறகு அதைப் பற்றிப் பேசலாம் என்றிருக்கிறேன். எந்தத் திட்டம், எந்தத் துறையாக இருந்தாலும் சரி, அவர் கொடுத்த திட்டத்தை நீங்கள் ஒன்று என்ன செய்யலாம்; நான் படித்துப் பார்த்தேன். 244 பக்கங்கள் இருந்தன.

அவர் கொடுத்த திட்டத்தை நீங்கள் ஒன்று Top up செய்யலாம். சில நேரங்களில் பார்த்தீர்களென்றால், Cannot be reachable என்று வருகிறது உங்கள் திட்டம். சில நேரங்களில் பார்த்தால், SIM card-யே இல்லாத மாதிரி இருக்கிறது. இருப்பதை இருப்பதாகக் காட்டுவது பழமை; இல்லாத ஒன்றை இருப்பதாகச் செய்வது புதுமை; இயலாத ஒன்றை இயன்றதாகச் செய்வது புரட்சி. நீங்கள் மாபெரும் புரட்சியை நாங்கள் செய்யப்போகிறோம் என்று உங்களுடைய பட்ஜெட்டில் சொன்னீர்கள். ஆளுநர் உரையில் சொன்னீர்கள். Election agenda-ல் சொன்னீர்கள். 244 பக்கங்களையும் புரட்டிப் பார்க்கிற போது, இதில் எந்தப் புரட்சியும் இல்லை, இருக்கிறதும் இல்லாததைப் போன்று இருக்கிறது. பெரிய, புதிய திட்டங்களும் சிறப்பிக்கக்கூடிய அளவிற்கு மக்கள் மனதைக் கவரக்கூடிய அளவிற்கு உங்களுக்கு எந்தத் திட்டங்களும் இல்லை. மக்களுக்கு தோள் கொடுக்கக்கூடிய திட்டமாகவும் இல்லை. வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சித் துறை இதுதொடர்பான மானியக் கோரிக்கையை அடுத்து நாம் பேசிக்கொள்ளலாம்.

இந்த இடத்தில் எங்களுடைய இளம் தலைவர், அனைத்து திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாக மாண்புமிகு பேரவைத் தலைவரிடம் ஒரு கோரிக்கையை வைத்தார்கள். புறநானூற்றில் 204 வது பாடலாக கழைதின் யானையார் என்ற ஒரு பெரும்புலவர் ஒரு பாடலை எழுதியிருக்கிறார்.

'ஈ' என இரத்தல் இழிந்தன்று; அதன் எதிர்,

'ஈயேன்' என்றல் அதனினும் இழிந்தன்று;

'கொள்' எனக் கொடுத்தல் உயர்ந்தன்று; அதன் எதிர்,

'கொள்ளேன்' என்றல் அதனினும் உயர்ந்தன்று;

இது புறநானூற்று காலத்தில் அன்றைய ஆட்சியாளர்களுக்கு கவனத்திலிகொள்வதற்காக சொன்ன விஷயம். இங்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சியாளராக இருந்து உங்கள் அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எங்களுடைய கேட்காமலேயே கார் கொடுப்பேன் என்று சொன்னார். கொடுத்தார். ஆனால், 'கொள்ளேன்' என்றல் அதனினும் உயர்ந்தன்று என்பதை இந்த நாட்டுமக்களின்— விவசாயப் பெருங்குடி மக்கள், எங்களுடைய விவசாயக் கடனை முழுமையாகத் தள்ளுபடி செய்யவில்லை. இந்த நாட்டிலே கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய திட்டங்கள், மீனவ சகோதரர்களுக்கு 20,000 ரூபாய் நிவாரணத் தொகை கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். "எல்லோரும் வாயிலே தான் வடை சுடுவார்கள். ஆனால், நான் வந்தால் அடுத்த நிமிடம் இந்த மீனவ சமுதாய மக்களுக்குப் பிரதிநிதியாக முதல் கையெழுத்தாக அது இருக்கும்" என்பது காணவில்லை. இந்த இடத்தில் காரை வாங்கி என்ன செய்யப்போகிறோம்? நாட்டுமக்களுடைய வாழ்வாதாரத்தை முதலமைச்சர் அவர்கள் உயர்த்த வேண்டுமென்பதற்காக இங்கே பாருங்கள். நான் எதையுமே குறை சொல்லவில்லை.

**அனைத்து தேர்தலிலும் வெற்றி பெற்றுள்ளேன்!**

நான் தற்போது மூன்றாவது முறையாக சட்டமன்ற உறுப்பினராகவும், ஏற்கெனவே இரண்டு முறையும் இருந்திருக்கிறேன். 25 ஆவது வருடத்தில் மதுரை சட்டக் கல்லூரியில் படித்து முடித்து வந்த பிறகு, சுமார் 27 ஆண்டுக்காலமாக தொடர்ந்து மக்கள் பிரதிநிதியாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறேன். ஐந்தாண்டுக்காலம் ஒன்றியக் குழுவின் தலைவராக பணி செய்திருக்கிறேன். அதே தொகுதியில், அதேயிடத்தில்தான் நான் தேர்தலில் நின்றிருக்கிறேன். நின்ற தேர்தல்கள் அனைத்திலும் நான் வென்றிருக்கிறேன்.

நான் அவர்களுக்கு ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்கள் விளாத்திகுளம் தொகுதி, தூத்துக்குடி மாவட்டத்தில் 35 சதவீத எல்லையைக் கொண்டிருக்கிற பகுதி. 35 சதவீத நிலப்பரப்பு அங்கிருக்கிறது. 143 கிராம பஞ்சாயத்துகள், 500 hamlets, 3 பேரூராட்சிகள் என்று ஒரு பெரிய நிலப்பரப்பிற்குச் சொந்தமானது எனது விளாத்திகுளம் தொகுதி. ஏறக்குறைய 56 கி.மீ. கடற்பரப்பு, பல்வேறு குக்கிராமங்களைக் கொண்டிருக்கக்கூடிய அந்தப் பகுதியில், நான் ஒவ்வொரு கிராமமாகச் சென்று, ஒவ்வொரு மக்களுடைய இதயத்திலும் இருந்த காரணத்தினால்தான், இந்த அவைக்கு தேர்வு செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு முன்பு, இங்கிருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள், மாடத்திலிருப்பவர்கள், என் விளாத்திகுளம் தொகுதியிலுள்ள அன்பிற்குரிய வாக்காளப் பெருமக்கள், எங்கள் கழகத்தின் உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய மனமார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை என்பது, இன்று நேற்று உருவாக்கப்பட்ட ஒரு துறை அல்ல. இதனுடைய பூர்வாங்கத்தை நாம் பார்த்தோமானால், எங்களுடைய தூத்துக்குடி மாவட்டம் pioneer ஆன ஒரு மாவட்டம். கீழடி, சிவகளை, ஆதிச்சநல்லூர் இவற்றில், சிவகளை எங்களுடைய தூத்துக்குடி மாவட்டத்தின் தாமிரபரணி கரையில் இருக்கிறது. ஆதிச்சநல்லூரும் எங்கள் மாவட்டம்தான். தூத்துக்குடி, சென்னைப் பட்டினம் துறைமுகங்கள் வருவதற்கு முன்பே கொற்கை தான் முதன்முதலான ஒரு துறைமுகம்.



**பாண்டியர்களுடைய துறைமுகம்**

பாண்டியர்களுடைய துறைமுகம். அந்தக் கொற்கை அமைந்திருக்கிற மாவட்டம் தூத்துக்குடி மாவட்டம். அந்த இடத்தில் அகழாய்வு செய்து, ஹரப்பா, மொகஞ்சதாரோவிற்கு இணையான பல்வேறு நகர்ப்புறங்களில் வாழ்ந்த வரலாற்றுச் செய்திகளையெல்லாம் முன்னாள் தொல்லியல் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் புளோரிடாவில் இருக்கக்கூடிய ஆய்வகத்திற்கு அனுப்பி 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பழமையான நாகரிகம், இந்தத் தமிழ்நாட்டுநாகரிகம். ஒரு planned constructive people தமிழ்நாட்டு மக்கள் என்பதை அவர்கள் வெளிக்கொணர்ந்தார்கள். அது பொருநை ஆற்று நாகரிகமாகவும், கீழடியில் அருங்காட்சியகமாகவும், Egmore-ல் அருங்காட்சியகமாகவும் இதையெல்லாம் நாங்கள் காட்சிப்படுத்தியிருக்கிறோம்.

தஞ்சை பிரகதீஸ்வரர் கோயில். இராஜராஜசோழன் அவர்கள் ஒரு மிகப் பிரம்மாண்டமான கட்டமைப்பை உருவாக்கினார். இந்த planning, எப்படி இவ்வளவு tonnage உள்ள ஒரே கல்லை மேலே ஏற்ற முடியும் என்பது வரலாற்றுக்கே வியப்பாக இருக்கக்கூடிய அந்த planning. கங்கை கொண்ட சோழபுரத்தில் இராஜேந்திரசோழன், மாறவர்ம சுந்தர பாண்டியன், மதுரை மீனாட்சியம்மன் கோயிலினுடைய கிழக்கு கோபுரம், எங்களுடைய வெட்டுவான் கோயில், காவிரியில் கரிகால் பெருவளத்தான் கட்டிய கல்லணை இவையெல்லாம் நம்முடைய planning உடைய மிகப்பெரிய திட்டமிடல்.

இதற்குப்பிறகு சுதந்திர இந்தியா. பிரித்தானியர்கள் ஆட்சி செய்தார்கள். நம்முடைய Egmore Railway Station, Central Railway Station, நாம் இருக்கக்கூடிய இந்த சட்டப்பேரவை, இதுபோன்ற மிகப்பெரிய கட்டுமானத்தை, Boat Club அவர்கள் உருவாக்கிய planned city. அதற்குப் பிறகு உலக வரலாற்றில் எந்தப் பேனாவுக்காக ஒரு தலைவனைப் பற்றிப் பேசினார்களோ அந்த முத்தமிழறிஞர் கலைஞர், அந்தக் கலைஞர்தான், அந்தத் தலைவர்தான்-- இன்றைக்கு சென்னையிலே பிரதானமான ஒரு city எதுவென்று பார்த்தால், அது அண்ணா நகர். அண்ணா நகர், அடையாறு, பெசன்ட் நகர், கே.கே.நகர், அசோக் நகர் என்று வரலாற்றுச் சிறப்புமிக்க மிகப் பெரிய கட்டுமானங்களையெல்லாம் உருவாக்கிய ஒரு மாபெரும் மனிதப் புனிதர், மனிதத் தலைவர், எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள். நான் இதை ஏன் குறிப்பிட விரும்புகிறேன் என்று சொன்னால், நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இன்று அவையில் இல்லை அவரைப் பற்றி எந்தக் குற்றச்சாட்டும் நான் சொல்ல வரவில்லை.

**குடிசைமாற்று வாரியம்!**

கடந்த 75 ஆண்டுகால திராவிட ஆட்சியில் இங்கு சேரிகள்தான் இருக்கிறது. இங்கு மக்களினுடைய வாழ்வாதாரம் என்ன இருக்கிறது என்பதைப் பேசினார்கள். எங்களுடைய தங்கத் தலைவன், எங்களுடைய தானைத் தலைவன்தான் முதன்முதலில் குடிசைகளில் இருக்கிறவர்கள், குளத்துக்கரையில் இருக்கிறவர்கள், ஆற்றுப் படுகைக்குப் பக்கத்தில் இருக்கிறவர்கள், கால்வாயிலும், கழிவுநீரிலும் தன்னுடைய ஓலைக் குடிசையிலும், பேப்பரிலும் போட்டு வசிக்கிறவர்களுக்கெல்லாம் குடிசை மாற்று வாரியத்தை உருவாக்கிக் கொடுத்த மகத்தான தலைவர். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியாவில் constructive compact houses யாருக்கு? அனைத்து தகுதியான மக்களுக்கும். ஆதி திராவிடர்கள், பிற்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர்கள், கடைநிலையில் இருக்கிறவர்கள், விளிம்புநிலையில் இருக்கிறவர்களுக்கெல்லாம் அவர் கட்டிக் கொடுத்தார். அந்தத் தலைவன் கட்டிக் கொடுத்த அந்தத் திட்டத்தைக்கூட எங்களுடைய தலைவர் சூரியனைச் சுற்றி பூமி, ஒரு மணி நேரத்திற்கு 1,07,200 kilometres per hour speed-ல் அந்த orbit-ல் தன்னைத்தானே சுற்றிக்கொண்டு அதுவும் சுழன்று கொண்டிருப்பதாகத்தான் space science சொல்லுகிறது. அவ்வளவு சக்தி படைத்த உழைப்புக்குச் சொந்தக்காரர், இரவும் பகலும் பாராது உழைத்திட்ட முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) குடிசை மாற்று வாரியம் என்றுகூட அவர்களை சொல்லிவிடக் கூடாது, நகர்ப்புற வாழ்வில் மேம்பாட்டு வாரியம் என்று அதை உருவாக்கி,-- இந்த Marina Beach இருக்கிறது பார்த்தீர்களா---நான் என்ன கேட்கிறேன், உங்களுடைய அமைச்சர்கள், நீங்கள் சிறப்பாக பேசுங்கள். இந்த ஆட்சியை சிறப்பாக செய்யுங்கள். மக்கள் உங்களுக்கு வாக்களித்திருக்கிறார்கள்.

அதில் எந்த மாற்றுக்கருத்தும் இல்லை. ஆனால், இங்கிருக்கக்கூடிய மக்களை நாங்கள் மாடி வீட்டிற்குச் செல்ல வேண்டுமென்று நினைக்கிறோம். அவர்களை மிட்டாமிராசுதாரர்களுக்கு இணையாக வர வேண்டுமென்று நினைக்கிறோம். ஆனால், Beach-ல் இருந்து சாந்தோம் வரைக்கும் செல்லும்போது, அந்த இடத்தில் இருக்கக்கூடிய Housing Board வீடுகளையெல்லாம் பார்த்தால் அந்த வங்கக் கடலினுடைய தென்றல் காற்றை அவர்கள் சுவாசித்துக்கொண்டு, மிகப்பெரிய வசதியானவர்களுக்கு இணையாக அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிற வரலாற்றை உருவாக்கிய இயக்கம் திராவிட இயக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**கிளாம்பாக்கம் பேருந்து நிலையம்!**

இதேபோன்றுதான், ஒவ்வொரு திட்டமும், இங்கேயிருக்கக்கூடிய எங்களுடைய தலைவர், கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தை எடுத்துக் கொண்டாலும் சரி, எங்களுடைய ஒவ்வொரு திட்டங்களை இங்கிருந்து, நம்முடைய Anna Centenary Library அங்கு உருவாக்கினாலும் சரி, பொதுப் பணித் துறைமூலம் நம்முடைய Planning Commission மூலம் இங்கிருந்து திட்டமிட்டு அமைக்கப்பட்ட கலைஞர் பன்னோக்கு மருத்துவமனை super speciality hospital, 1000 beds கொண்ட மருத்துவமனையாக இருந்தாலும் சரி, ஓமந்தூரார் மருத்துவமனையாக இருந்தாலும் சரி, ஒவ்வொரு விஷயத்தையும் இந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு மிக பக்குவப்பட்டு, மிகச் சிறப்பாக வழி நடத்தியிருக்கிறது.

இப்படியெல்லாம் நாங்கள் 75 ஆண்டுக்காலமாக தொடர்ந்து இந்த மக்களுக்கு மிகச் சிறப்பாகப் பணியாற்றிய காரணத்தினால்தான், நீங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்திருக்கிறீர்கள். ஆட்சிப் பொறுப்புக்கு வந்திருக்கிற உங்களிடம், நாங்கள் இவ்வளவு சிறந்தவர்கள் என்ற காரணத்தினால் தான், நீங்கள் சிறப்பாகச் செயல்பட வேண்டுமென்று உங்களுக்கு ஆலோசனை சொல்கிற யோக்கியதை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருக்கிறது. அந்த ஆலோசனையை நாங்கள் சொல்கிற போது, அதை நீங்கள் ஆலோசனையாக எடுத்துக்கொள்ள வேண்டும். அதை நீங்கள் உடனே என்ன செய்கிறீர்கள் என்றால், இந்த அவையில் பல்வேறு விவாதங்கள் எல்லாம் நடந்திருக்கின்றன, அதில் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் ஒரு கோரிக்கையாகவோ, அரசினுடைய திட்டங்களுக்கு நாங்கள் எதிர்ப்பு தெரிவித்துப் பேச வேண்டுமென்று சொன்னாலும்கூட, அதைப் பக்குவமாக உள்வாங்கி, (குறுக்கீடு) please, உட்காருங்கள். நான் எதையுமே குறை சொல்லவில்லை, குறை சொல்லவில்லை.

**தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி!**

பேரவைத் தலைவர் அவர்களே, நான் எதற்காக இதனைச் சொல்கிறேன் என்றால், எங்களுடைய இந்தக் கட்டமைக்கப்பட்ட, உங்களுக்குச் சொல்கிற இந்த ஆலோசனைகள்--, நான் எந்த அமைச்சர் என்று சொல்லி, யாரையும் வன்மமாக ஏதும் சொல்லவில்லை. தமிழ்நாட்டில் இன்றைக்கு எவ்வளவு GDP growth இருக்கிறது என்றால், இன்றைக்கு இரட்டை இலக்கத்தில், அதாவது 12 சதவிகிதத்திலிருந்து 13.4 சதவிகிதம் வரைக்கும் நாம் உயர்ந்திருக்கிறோம். அதற்குக் காரணம் ஏற்கெனவே இங்கு பேசிய ஓர் அமைச்சர் அவர்கள் 30 ஆண்டுக் காலத்திற்கு முன்பு, cycle-ல் சென்றவர்கள் என்று சொன்னார். நான் யாரையும் குறை சொல்லவில்லை. 30 ஆண்டுக்காலத்திற்கு முன்பு cycle-ல் செல்கிறபோது, அன்றைக்கு நம் நாட்டில் இருந்த மொத்த வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்றால், 31 இலட்சத்து 80 ஆயிரம்தான். 1990-ல் நீங்கள் எடுத்துப் பார்த்தீர்கள் என்றால் 31 இலட்சத்து 80 ஆயிரம் வாகனங்கள்தான் நம் நாட்டில் இருந்தன. இன்றைக்கு எவ்வளவு வாகனங்கள் இருக்கின்றன என்றால், சுமார் 3 கோடியே 85 இலட்சம் வாகனங்கள் இருக்கின்றன. இதற்குக் காரணம் திராவிட முன்னேற்றக் கழகம். இங்கு e-bike, bike, car எல்லாமே இருக்கின்றன. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி.

திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி, இந்தியாவிலேயே நாம்தான் top-1-ல் இருக்கிறோம். நம்முடைய transport vehicle என எல்லாவற்றிலும். எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், GDP-ல் first இருப்பதால்தான், இவ்வளவு பெரிய growth-ஐ நம்மால் அடைய முடிந்தது. இந்த விஷயத்தில் நாங்கள் சொல்கிறோம், இங்கிருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள், இங்கிருக்கக்கூடிய அமைச்சர்கள், உலக வரலாற்றில் இன்றைக்கு இருக்கக்கூடிய அரசியல் சூழ்நிலையில், இந்தியாவில் இருக்கக்கூடிய அரசியல், தமிழகத்தில் இருக்கக்கூடிய அரசியல் சூழ்நிலையில், எந்தத் தனி மனிதனும், எந்தத் தொழிலை வேண்டுமானாலும் செய்யலாம். ஒரு தனி மனிதன், அது சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும், அமைச்சராக இருந்தாலும், பேரவைத் தலைவர் உட்பட, தொழில் செய்வதற்கான உரிமை அவரவர்களுக்கு இருக்கிறது. ஆனால், சட்டத்திற்குப் புறம்பான தொழிலை மட்டும்தான் செய்துவிட முடியாது. சட்டத்திற்குப் புறம்பான தொழில்களை செய்துவிட முடியாது. ஒருவர் கல்லூரியை நடத்துவதற்கோ, ஒருவர் கல் quarry நடத்துவதற்கோ, ஒரு crusher நடத்துவதற்கோ என எல்லாவற்றுக்கும் உரிமை இருக்கிறது. ஆனால், அதை சட்டப்படி நடத்துகிறார்களா என்பதைத்தான் பார்க்க வேண்டும். இங்கு பேசுகிறவர்கள், விதிமுறைகளை மீறியிருக்கிறது என்பதைப் போன்று சொல்லி, வெளியில் தொழில் செய்கிற அத்தனை பேரையும், ஏதோ ஓர் அச்சுறுத்தலைச் செய்வதைப் போன்று ஆட்சியாளர்களே நடந்துகொண்டால், இந்த நாட்டில் வியாபாரம் குறைந்து போகும். அங்கிருக்கக்கூடியவர்கள் அச்சப்படுகிறார்கள். அதைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன்.

குற்றம் எதுவாக இருந்தாலும் சரி, நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பில் இருப்பது அரசு. ஆனால், இந்த நாட்டில், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற ஓர் அருமையான முதுமொழியை உங்கள் கட்சியினுடைய கொள்கையாக வைத்திருக்கிறீர்கள். எங்கிருக்கக்கூடியவர்களையும் ஏற்றுக் கொள்கிறீர்கள். இங்கே வங்காள தேசத்தைச் சேர்ந்தவர்கள், இங்கே West Bengal-ஐச் சேர்ந்தவர்கள், 7 Sister States-ஐச் சேர்ந்தவர்கள் எல்லாம் இங்கு தமிழ்நாட்டில் பல்வேறு வேலைகளில் வேலை செய்கிறார்கள். எங்கள் ஊரில் இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள், இங்கிருக்கக்கூடிய,.. (மணியடிக்கப் பெற்றது)

கல்வி போன்ற பல்வேறு இடங்களில், VIT பல்கலைக்கழகத்தின் திரு. விசுவநாதன், 1967-ல் கலைஞரால், பேரறிஞர் அண்ணாவால், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 25 வயது, 26 வயதில் நாடாளுமன்ற உறுப்பினராக ஆக்கப்பட்டார். இன்றைக்கு VIT பல்கலைக்கழகம் இந்தியாவிற்குப் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) RMK-வினுடைய கல்வி நிறுவனம் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கிறது. இங்கிருக்கக்கூடிய அத்தனை பேருமே, சிறந்த கல்வியாளர்களாக, நன்மதிப்பைப் பெற்ற தொழிலைச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

ஒரு விஷயம், தொழிலாளிகள் 1,000 ரூபாய் சம்பாதிக்கிறார்கள், 800 ரூபாய் சம்பாதிக்கிறார்கள், 500 ரூபாய் சம்பாதிக்கிறார்கள். 500 ரூபாய் சம்பாதிக்கிற ஒரு தொழிலாளி, என்றைக்காவது நான் ஒரு கோடீஸ்வரனாகிவிட முடியுமா என்று சொல்லி, ஒரு லாட்டரிச் சீட்டை வாங்கி, தன் வாழ்நாள் எல்லாம் இழந்து, வாழ்க்கையை இழந்து விடுகிறான். இதை எதற்கு சொல்கிறேன் என்றால், இந்த மாதிரியான தவறுதலான தொழில்களைத்தான் நாம் செய்துவிடக்கூடாதே தவிர, நாம் எந்தத் தொழில்களைச் செய்யலாம்? மற்ற சட்டத்திற்கு உட்பட்ட—தமிழ்நாடு அரசாங்கம் அங்கீகாரம் கொடுக்கவில்லை. அங்கீகாரம் கொடுக்கப்பட்ட அத்தனை தொழில்களையுமே செய்யலாம்.

எங்களுடைய ஆட்சி பல்வேறு காலகட்டங்களில் மிகச் சிறப்பான பல்வேறு திட்டங்களைச் செய்திருக்கிறது. நீங்கள் ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறீர்கள். "MY-HOME" (Metropolitan Youth and Family Housing Scheme) என்று சொல்கிற ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறீர்கள். அதில் 1 இலட்சம் வீடுகள், 5 ஆண்டு காலங்களுக்கு, 15 இலட்சம் ரூபாய் ஒரு வீட்டிற்கு என்று சொல்லியிருக்கிறீர்கள். அதில் gap-filling fund ஆக 3,500 கோடி ரூபாய். ஒரு வீட்டிற்கு 3 இலட்சம் ரூபாய் என்று சொல்லியிருக்கிறீர்கள். அவ்வாறு என்றால், மொத்தம் எவ்வளவு? 18 இலட்சம் ரூபாய். 18 இலட்சம் ரூபாய் வீட்டை இவர்களுக்கு rent-க்கு கொடுக்கப்போகிறீர்களா? அவர்களுக்கு own ஆக கொடுக்கப்போகிறீர்களா? அல்லது rental basis-ல் வந்தவர்களை house owner ஆக்கப் போகிறீர்களா? அதற்குள்ள sewage, அதற்குள்ள underground drainage அதற்குள்ள infrastructure construction-க்கு பணம் ஒதுக்கியிருக்கிறீர்களா? இவ்வளவு பெரிய திட்டத்தை கொடுத்திருக்கிற நீங்கள், பக்க எண் 244-ல் "MY-HOME" ஒரு பேனாவினுடைய பத்து பைசா மை அளவிற்குக்கூட இந்தத் திட்டத்தினுடைய demonstration இல்லை. (மணியடிக்கப்பெற்றது)

அதனால் ஒன்றுபட்ட வளர்ச்சி, நம்முடைய Speaker அவர்கள் சொன்னமாதிரி, இரயிலில் இரண்டு தண்டவாளங்கள் மாதிரி இருந்தால்தான், ஒரு ஆட்சி மிகச் சிறப்பாக நடக்கும். இந்த ஆட்சியை நான் வெகு சிறப்பாக மதிக்கிறேன். இறுதியாக ஒரேயொரு வார்த்தை, 'மயிர் நீப்பின் உயிர் நீக்கும் கவரிமான்' என்பது ஒரு மிகப்பெரிய முதுமொழி. இந்த சட்டமன்றத்தினுடைய கதவுகள் மூடப்படுமேயானால்—நீக்கிறதைவிட இந்த சட்டமன்ற உறுப்பினர் பதவி ஒன்றும் பெரிதல்ல. விளாத்திகுளம் மக்களினுடைய குரல்வளை நெரிக்கப்பட்டுவிடக்கூடாது என்பதை நினைவுபடுத்துவதற்கு நான் இந்த அவையிலே என்னுடைய கருத்தை பதிவு செய்து, எங்கள் பகுதி மக்களினுடைய குரல் என்றுமே இந்த சட்டமன்றத்தில் ஒலிக்க வேண்டும், ஏற்கெனவே அவை உரிமை மீறல் பிரச்சினை விஷயமாக என்னுடைய கடிதத்தைக் கொடுத்திருந்தேன். நீங்கள் இதையெல்லாம் ஆய்வு செய்ய வேண்டும். மக்களினுடைய கருத்துக்கு இந்த அவை என்றுமே மதிப்பு கொடுக்க வேண்டும். மக்கள் பிரச்சினைகளைத்தான் இங்கு பேச வருகிறோம். எங்களுடைய தலைவர் எங்களைப் பண்பட்ட மனிதர்களாக வரவேண்டும் என்றுதான் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு விளாத்திகுளம் ஜி.வி.மார்க்கண்டேயன் பேசினார்.

---

## போக்குவரத்து நெரிசலைக் குறைத்திட

# வந்தவாசி தொகுதியில் புறவழிச் சாலைகளை அமைத்துத் தாரீர்!

## சட்டப்பேரவையில் — எஸ்.அம்பேத்குமார் வலியுறுத்தல்!

சென்னை, செப். 6-

வந்தவாசி தொகுதியில் புறவழிச் சாலைகள் அமைத்து தாரீர் என்று கழக உறுப்பினர் எஸ். அம்பேத்குமார் வலியுறுத்தினார்.

இதுகுறித்து சட்டப் பேரவையில் அவர் எழுப்பிய கேள்வி வருமாறு:-



வந்தவாசி சட்டமன்றத் தொகுதி நாளுக்கு நாள் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்ற தொகுதி. காரணம் திருச்சி, மதுரை, விழுப்புரம் போன்ற பகுதிகளில் உள்ளவர்களெல்லாம் திருப்பதி செல்வதற்கு வந்தவாசி, காஞ்சிபுரம் வழியாக செல்கின்ற ஒரு வழித்தடமாக மாறிக் கொண்டிருக்கின்றது.

வந்தவாசி புறவழிச் சாலை 60 சதவிகிதம் முடிவடைந்துள்ளது. மக்கள் பயன்பாட்டில் உள்ளது. இப்போது வந்தவாசி - மேல்மருவத்தூர் - காஞ்சிபுரம் புறவழிச் சாலையும், வந்தவாசிகாஞ்சிபுரம் சாலையிலிருந்து வந்தவாசி- செய்யாறு புறவழிச்சாலையும் அமைத்துத் தந்தால், வந்தவாசி முழுவதும் *Outer Ring Road* முடிவடைந்துவிடும்.

ஆகவே, அமைச்சர் அவர்கள் செய்து தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

இவ்வாறு எஸ். அம்பேத்குமார் கேள்வி எழுப்பினார்.

---

## திருவண்ணாமலை — கடலூர் இடையே நிலுவையில் உள்ள

# நான்கு வழிச் சாலைப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும்!

## சட்டமன்றத்தில் — வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. கோரிக்கை!

ரிஷிவந்தியம், செப்.6:

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை வினாக்கள் - விடைகள் நேரத்தின் போது, கள்ளக்குறிச்சி மாவட்டக் கழகச் செலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் அவையின் கவனத்தை ஈர்த்து பேசியதாவது:

திருவண்ணாமலையில் இருந்து கள்ளக்குறிச்சி அதாவது தியாகதுருகம், மணலூர்பேட்டை வழியாக கடலூர் மாவட்டத்தை இணைக்கின்ற சாலையை நான்கு வழிச்சாலையாக மாற்றும்



திட்டத்தில், முதல் இரண்டு கட்ட பணிகள் தற்சமயம் நிறைவடையும் நிலையில் உள்ளன. ஆனால் இதர நிலுவையில் உள்ள சாலைப்பணிகள் இன்னும் முடிவுறாமல் உள்ளன. அந்த எஞ்சிய இரண்டு கட்ட பணிகளையும் முழுமையாக நிறைவு செய்தால் மட்டுமே. பொது மக்கள் இந்த சாலையை முழுமையாகப் பயன்படுத்த முடியும். குறிப்பாக திருச்சி மற்றும் மதுரை போன்ற தென்மாவட்டங்களில் இருந்து வருகின்ற பக்தர்கள் மற்றும் பயணிகள் அடரி வழியாக தியாகதுருகம், மணலூர்பேட்டை, திருவண்ணாமலை மற்றும் திருப்பதிக்குச் செல்வதற்கு இச்சாலை மிகவும் பயனுள்ளதாக உள்ளது. அதிக போக்குவரத்து நெரிசல் கொண்ட இந்த சாலையின் நிலுவைப் பணிகளை பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் விரைந்து முடித்துத் தருவாரா என அறிய விரும்புகிறேன்.

இதற்கு பதிலளித்துப் பேசிய பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர்: சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்ட அந்தச் சாலைப்பணிகள் தற்போது பரிசீலனையில் இருந்து வருகின்றன. கூடிய விரைவில் அதற்கான உரிய பணிகள் முறைப்படி தொடங்கப்பட்டு விரைந்து முடித்துக் கொடுக்கப்படும் என உறுதியளித்தார்.